[1972 மார்ச் 21

மானல் பரிசீலனை செய்யப்படும். கனம் அங்கத்தினர் கோரிக்கையையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சோனேயா : தலைவரவர்களே, தேங்காய், மட்டையிலிருந்து கயிறு திரிக்கின்ற தொழிலுக்கு அரசாங்கம் உதவி செய்யும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, கூடுதலாக எந்த அளவுக்கு தொகை கடனாக அரசாங்கம் வழங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் கயிறு திரிப்பதிலேயே இருக்கிறார்கள். கயிறு திரிப்பதோடு நின்றுவிடாமல் பல உப பொருட்களையும் உருவாக்க முடியும். அதற்கும் அரசாங்கம் உதவி செய்யும். எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும் நிலம் வாங்க, கட்டிடங்கள் கட்ட, இயந்திரங்கள் வாங்க, மற்றும் உள்ள செலவுகளுக்கு எவ்வளவுத் தேவைப்படுகிறதோ அதில் 75 சதவிகிதம் வரை கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்துக்கு உருக்காலை.

* 610. வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உருக்காலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

கரூர்–தூத்துக்குடி இரயில் பாதை.

* 611. வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கரூருக்கும் தூத்துக்குடிக்குமிடையே அகல இரயில் பாதை அமைக்கக் கோரி, மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கரூர் வழியாக சேலத்திலிருந்து திண்டுக்கல் வரை அகலப்பாதை அமைத்தல், திண்டுக்கல்–தூத்துக்குடி (மதுரை வழி) இருப்புப்பாதையை அகலப்